# அறிவியல் தொழில் நுட்பம் சாதாரண மக்களையும் சென்றடைய வேண்டும்

## துணைநிலை ஆளுநர் முகுத்மித்தி பேச்சு

புதுச்சேரி, பிப். 22: அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியும் அதன் பயனும் சாதாரண மக்களையும் சென்றடையும் விதத்தில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று துணைநிலை ஆளுநர் முகுத்மித்தி பேசினார்.

கடலோர பகுதியில் உள்ள மீனவர்கள் பேரிடர் காலங்களில் தற்காத்துக் கொள்வதற்காக தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தகவல்களை பரிமாறிக் கொள்வது தொடர்பாக தொழில்நுட்ப வல்லுநர்களுடன் கலந்தாய்வு கருத்தரங்கு புதுவை பல்நோக்கு சமூக சேவா சங்கத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற புதுவை துணைநிலை ஆளுநர் முகுத்மித்தி பேசியது:

டிச. 26, 2004-ம் ஆண்டில் சுனாமி பாதிப்பு ஏற்பட்டது. இதில் சுமார் 2.8 லட்சம் பேர் இறந்தனர். 4.45 மில்லியன் டாலர் அளவுக்கு பொருள் சேதம் ஏற்பட்டது. இச் சம்பவம் நடந்த பிறகுதான் பேரிடர் மேலாண்மை குறித்து சிந்திக்க ஆரம்பித்துள்ளோம்.

வரக்கூடிய ஆபத்தை முன் கூட்டியே அறிந்து அந்தத் தகவலை பறிமாறிக் கொள்ளும் விதத்தில் மக்களை உஷார் படுத்துவதே பேரிடர் மேலாண்மையின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். அதேபோல் தரும் தகவல் சரியான தகவலாக இருக்க வேண்டும். பேரிடர்களை சமாளிக்க சாதாரண மக்களையும் தயார் படுத்த வேண்டும்.

பேரிடர்களை முன் கூட்டியே அறிந்து சமாளிக்க தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி உதவுகிறது. உதாரணமாக புயல், மழை முதலியவற்றை தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் நாம் நன்கு அறிந்து கொள்ளலாம். நமது தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியானது அறிவியல் சார்ந்தவர்களுடன் நின்றுவிடக் கூடாது. அது சாதாரண மக்களையும் சென்றடையும் விதத்தில் இருக்க வேண்டும்.

புயல், மழையைப் போல சுனாமியையும் நாம் முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியும். 2004 டிசம்பர் 26-ம் தேதி கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் சுனாமி வந்து 7 மணி நேரத்துக்கு பிறகே கிழக்கு ஆப்பரிக்க பகுதிகளில் சுனாமி அலைகள் அடித்துள்ளன. இது போன்ற சமயங்களில் விரைவான தகவல் பரிமாற்றம் மூலம் பல உயிர்களை காப்பாற்ற முடியும்.



பேரிடர் மேலாண்மை குறித்த ஆலோசனை கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசுகிறார் துணைநிலை ஆளுநர் முகுத் மித்தி. உடன் (வலமிருந்து) புதுச்சேரி-கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் டாக்டர் அந்தோனி ஆனந்தராயர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை சேர்ந்த எஸ்.எம்.ராமசாமி.

வங்கதேசத்தில் அந்த அரசும் தனியார் நிறுவனமும் இணைந்து புயல் வருவதை கண்டறிந்து எச்சரிக்கை செய்வது தொடர்பான தொழில் நுட்பம் நல்ல பலனைக் கொடுத்துள்ளது. சாதாரண மக்களுக்கு விரைவில் தகவல் பரிமாற்றம் சென்றடையும் விதத்தில் புதிய தகவல் தொழில் நுட்பத்தை உருவாக்க வேண்டும். நாம் நடத்தும் இது போன்ற நிகழ்வுகளையும் பதிவு செய்து வைக்க வேண்டும் என்றார்.

இந் நிகழ்ச்சிக்கு புதுவை கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் டாக்டர் அந்தோனி ஆனந்தராயர் முன்னிலை வகித்தார். புதுச்சேரி பல்நோக்கு சேவா சங்கத்தின் நிர்வாக இயக்குநர் ரட்சகர் அடிகள் உள்ளிட்ட பலர் பேசினர். புதுச்சேரி பல்நோக்கு சேவா சங்கத்தின் பொது மேலாளர் ரோக் புஷ்பராஜ், பயிற்சி மேலாளர் அலோசியஸ், திட்ட மேலாளர் பாக்யராஜ், ஐ.சி.டி திட்ட மேலாளர் ஸ்டீபன் ராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இந் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.